22nd September 1958]

(b) whether any diversion has been made so as to connect the Adams Road with the Marina Road;

(c) whether any bridge is proposed to be constructed to cross the channel;

(d) the cost involved in realigning this Adams Road; and

(e) who bears this cost?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) Yes, Sir.

(d) The estimated cost involved in the realignment of the road is Rs. 1·5 lakhs and that for the construction of a bridge is Rs. 1·75 lakhs.

(e) The Government of Madras and the University of Madras bear the cost on a 50 : 50 basis.

SRI K. VINAYAKAM : ஆடம்ஸ் ரோடில் ஒரு பகுதியை யூனிவர்ஸிடி அதாரிடிகளுக்கும் கொடுத்துவிட்ட பிறகு, ஒரு டைவர்ஷன் ரோடு போட்டுக்கொண்டிருப்பது இன்னும் முடியாமலிருப்பதனாலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்கூட சட்டசபைக்கோ, அரசாங்க அலுவல்களுக்கோ வரவேண்டுமென்றால் மவுண்ட் ரோடைச் சுற்றிக்கொண்டுதான் வரவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, டைவர்ஷன் ரோடு போட்டு முடிவதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகும்? எப்பொழுது ப்ரிட்ஜ் கட்டி முடித்து பூர்த்தி ஆகும்? எப்பொழுது பொதுமக்கள் போகவர ரஸ்தா அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

MR. SPEAKER : The hon. Member is putting the question on behalf of the Hon. Finance Minister! (Laughter).

THE HON. SRI P. KAKKAN : வேலை முடிவதற்குத் துரிதமாய் ஏற்பாடு செய்யப்படும்.

Fishermen Co-operative Societies

* 419 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have received copies of resolutions passed at the Fishermen Co-operative Societies Conference held at Kumbakonam on 28th February 1958 protesting against the amendment of G.O. No. 200, Development, dated 16th January 1950; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The Government have received a copy of the resolutions.

(b) The resolutions are under the consideration of the Government.

SRI M. JAGANNATHAN : How long the Government propose to take to examine the resolution of the conference which was held as early as 21st February 1958?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : As much time as is necessary.

[22nd September 1958

SRI K. ANBAZHAGAN : மறுபடியும் புதுப்பிக்கப்பட இருக்கும் வாக்காளர் பட்டியல் முன்னர் இருந்ததுபோல் . . . .

MR. SPEAKER : இப்பொழுது நாம் 419-வது கேள்வியில் இருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : அவர் எல்லாவற்றிலும் முன்னேற்றம் தான் (சிரிப்பு).

Electoral Rolls

* 420 *Q*.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the electoral roll for the whole of the City of Madras would be revised and printed anew in this year before the election for the seats in the Corporation of Madras commences; and

(*b*) if not, what are the reasons?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Intensive revision of the electoral rolls of the City of Madras is made according to a definite programme spread over three years. With reference to this programme, the rolls of three Assembly Constituencies, viz., Harbour, Washermanpet and Basin Bridge have been taken up for intensive revision this year and the rolls of the remaining six Assembly Constituencies are being revised this year only non-intensively. However, lists of new colonies in non-intensive areas are being prepared, list of additions, obtained from the Corporation tax collection staff, the houses numbered and the rolls revised. The intensive revision of the rolls of the remaining six constituencies will ordinarily be completed in a period of two years, three constituencies being taken up in each year.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட அய்யனாவரம் போன்ற பகுதிகளில் இன்டெக்ரல் கோச் பாக்டரி காலனிகள் புதிதாக கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் காலனிகளில் இருக்கும்படியான மக்களுடைய பெயர்களை அந்த வாக்காளர் ஜாப்தாவில் சேர்க்கவில்லை என்பது உண்மையா? அப்படியானால், அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : வோட்டர்கள் ஜாப்தாவில் எல்லா இடங்களில் உள்ளவர்களும் சேர்க்கப்படவேண்டும் என்பதுதான் முறை. அப்படிச் சேர்க்கவில்லையென்றால் அதுவும் சேர்க்கப்படும்.

SRI K. ANBAZHAGAN : மறுபடியும் புதுப்பிக்கப்படவிருக்கும் வாக்காளர் பட்டியலில், வருகிற தேர்தலில் புதிய அடிப்படையில், புதிய பாகுபாடுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு நடைபெற வேண்டிய காரணத்தால், அதற்கு முன்னாலேயே தென்பகுதி முழுவதையும் புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஏற்பாடு செய்யப்படுமா? இடையே விட்டு விடப்படுகிற குப்பங்களில் உள்ளவர்களும் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் படுவார்களா ? அப்படித் தயாரிக்கப்படும் பட்டியலில் பிழைகள் இல்லாமல் இருப்பதற்கு அமைச்சர்களைக்கொண்ட, அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக்கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பிழைகள் இல்லாமலிருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அடுத்த தேர்தலுக்குள் இவைகள் கவனிக்கப்படும்.